தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை-6

ந.க.எண். 21243 / சி3 / இ1 / 2023 நாள்.13.07.2023

பொருள்: பள்ளிக் கல்வி 2022-23ம் ஆண்டு ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு அலகு விட்டு அலகு / துறை மாறுதல் - கல்வி தகவல் மேலாண்மை முறைமை (EMIS) இணையதளத்தில் கலந்தாய்வு நடத்துதல் சார்பாக.

பார்வை: 1)தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.21243/சி3/இ1/23 நாள்.26.6.23 & 6.7.2023

-0-

பார்வையில் காணும் இயக்குநரின் செயல்முறைகளின்படி பிறதுறையில் பணிபுரிந்து வரும் முதுகலை ஆசிரியர்கள் / பட்டதாரி ஆசிரியர்கள் அலகுவிட்டு அலகு / துறை மாறுதல் மூலம் பள்ளிக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அரசு/நகராட்சி உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரிய உரிய தடையின்மைச் சான்று பெற்று மாறுதல் மூலம் பணிபுரிவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் கலந்தாய்வுக்கான காலஅட்டவணை வெளியிடப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக தற்போது மேற்காண் அலகுவிட்டு அலகு / துறை மாறுதல் கோரி விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கு கீழ்க்காணும் தேதிகளில் EMIS இணையத்தளத்தில் Online மூலமாக அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் கலந்தாய்வு நடைபெறும். மேற்காண் கலந்தாய்வு நாளன்று துறை மாறுதல் கோரி விண்ணபித்த முதுகலை/பட்டதாரி ஆசிரியர்கள் கலந்துகெள்ள உரிய அறிவுரைகள் வழங்கிட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**காலஅட்டவணை**

| வஎண் | பொருள் | நாள் |
|---|---|---|
| 1 | அலகு விட்டு அலகு / துறை மாறுதலுக்கான முன்னுரிமைப் பட்டியல் வெளியிடுதல் (Seniority List) | 17.07.2023 |
| 2 | அலகு விட்டு அலகு / துறை மாறுதலுக்கான முன்னுரிமைப் பட்டியலில் திருத்தம் மற்றும் முறையீடுகள் இருப்பின் பதிவேற்றம் செய்ய வேண்டிய நாள் | 18.07.2023 |

| | | |
|---|---|---|
| 3 | அலகு விட்டு அலகு / துறை மாறுதல் விண்ணப்பங்களின் இறுதி முன்னுரிமைப் பட்டியல் வெளியிடுதல் (Final Seniority List) | 19.07.2023 |
| 4 | அலகு விட்டு அலகு / துறை மாறுதல் கலந்தாய்வு நடைபெறும் நாள் (Unit Transfer to All Dist) | 20.07.2023 |

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்(மின்னஞ்சல் மூலமாக)

நகல்: இணை இயக்குநர் (மேல்நிலைக் கல்வி) சென்னை – 6 தகவலுக்காக

நகல்: EMIS ஒருங்கிணைப்பாளர், மாநில திட்ட இயக்ககம் சென்னை – 6

நகல்: சம்மந்தப்பட்ட இவ்வியக்கக பிரிவு கண்காணிப்பாளர்கள்

நகல்: சம்மந்தப்பட்ட பிறதுறையின் ஆணையர்கள் / இயக்குநர்கள் / இணை இயக்குநர் / கல்வி அலுவலர்கள்

(தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு உரிய தகவல் அளித்திட நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)